**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No.95/2023** **Date:13.11.2025**

**(PW1)- டென்னிஸ்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பொதுவாக தாக்கல் செய்துள்ளேன். யாருக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆத்திவிளைஊர் மக்களுக்காக தாக்கல் செய்துள்ளேன். ஆத்திவிளைஊருக்கு என்று தலைவர், செயலாளர் என்று யாரும் உள்ளாரா என்றால் அவ்வாறு யாருமில்லை. ஆத்திவிளைஊர் என்பது 5 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டதாக இருக்குமா என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டதாக இருக்கும்.

2. ஆத்திவிளைஊரில் அனைத்து மத மற்றும் வெவ்வேறு சமுதாய மக்களும் வசித்துவ ருகிறார்கள் என்றால் சரிதான். ஆத்திவிளைஊரில் எனது வீட்டிற்கு அருகில் ஒரு சி எஸ் ஐ சர்ச் உள்ளது என்றால் சரிதான். அதே போல் நாராயணசாமி கோவிலும் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் எந்த கிறிஸ்தவ சபையை சார்ந்தவர் என்றால் முரசன்கோடு ஆர்சி கிறிஸ்தவ சபையை சார்ந்தவர். முரசன்கோடு ஊருக்கும் ஆத்திவிளைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும என்றால் 1 கிலோமீட்டருக்குட்பட்டு இருக்கும்.

3. மேற்படி முரசன்கோடு சபைக்கு தான் நான் வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் 10 அடி வழிபாதையை ஆக்கிரமித்து கட்டுவதால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் A பட்டிகை சொத்து எனது அம்மா எனக்கு எழுதி கொடுத்த சொத்து என்றால் சரிதான். மேற்படி A பட்டிகை சொத்தில் நான் எப்போது வீடு கட்டினேன் என்றால் 2016 ம் வருடம் முழுமையாக கட்டி முடித்தேன். அதன் பின்பு தான் நான் அந்த வீட்டில் குடியேறினேன் என்றால் சரிதான்.

4. B பட்டிகை சொத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டருக்கு மேல் இருக்கும். மேற்படி 200 மீட்டர் வழி பாதையை இந்த வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால்

குறிப்பிட்டுள்ளேன். என்னிடம காட்டப்படும பிராதில் வழக்கு B பட்டிகையாக எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 300 சதுர அடி குறிப்பிட்டுள்ளேன். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும் போது நான் உடனிருந்தேனா என்றால் உடனில்லை. மேற்படி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிடும் போது எனது தரப்பில் யார் உடனிருந்தார்கள் என்றால் ஊர்மக்கள் அனைவரும் உடனிருந்தனர்.

5. வழக்கு B பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் பிரதிவாதிகளின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு B பட்டிகை சொத்தை சுற்றி பிரதிவாதிகளின் குடும்பத்தினர் காம்பவுண்ட் சுவர் அமைத்து குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல, தெற்கு பக்கம் மட்டும் காம்பவுண்ட் சுவர் கட்டியிருந்தனர், மற்ற திசைகளில் காம்பவுண்ட் சுவர் இல்லை, தற்போது தெற்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவரை இடித்து கட்டுகிறார்கள். தெற்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவரை எப்போது இடித்தார்கள் என்றால் சுமார் 2 முதல் 3 வருடங்களுக்கு முன்பு இடித்தார்கள்.

6. மேற்படி காம்பவுண்ட் சுவரை நானும் எனது ஊர்மக்களும் சேர்ந்து இடித்தது தொடர்பாக பிரதிவாதியின் மனைவி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் அடிப்படையில் இரணயில் காவல்நிலையத்தில் என்மீதும் ஊர் மக்கள்மீதும் Cr.No. 464/2023 ல் 147, 447 , 427, 294 b, 379 ,506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை யில் என்னை 6 வது எதிரியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான், அது பொய் புகார் ஆகும். ஏற்கனவே இருக்கும் பாதையை அகலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதிகளின் தெற்கு பக்க காம்பவுண்ட் சுவரை நானும் எனது ஊர்மக்களும் சேர்ந்து இடித்து அப்புறப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

7. எனது குடும்ப மூதாதையர்களும் பிரதிவாதிகளின் குடும்ப மூதாதையர்களும் வெவ்வேறு பிரிவினர்கள் என்றால் சரியல்ல. எதனடிப்படையில் ஒரே குடும்பம் என்று குறிப்பிடுகிறேன் என்றால் தூரத்து சொந்தம் என்று கூறுவார்கள். எனது குடும்பத்திற்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்து B பட்டிகைசொத்திற்கும் எனது A பட்டிகைசொத்திற்கும் வெவ்வேறு மூதாதையர்களுக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான்.

8. எனது வீட்டின் மிக அருகாமையில் இரணியல் இரயில் நிலையத்தின் தெற்கு பக்கத்தில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து வெளியே வந்தாலே இரயில் நிலையமும், இரயிலின் போக்குவரத்தும் பார்வையிடும் தூரத்தில் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி ரயில்வே சொத்தின் தெற்கு பக்கம் 10 அடிக்கு மேல் அகலம் கொண்ட ஒரு பிரதான சாலையை இணைக்கும் ஒரு பாதை சென்று கொண்டிருக்கிறது என்றால் சரியல்ல, அதை அடைத்து விட்டார்கள். எப்போது அதை அடைத்தார்கள் என்றால் சுமார் 3 முதல் 4 வருடங்களுக்கு முன்னால் அடித்தார்கள்.

9. அதற்கு முன்பு நானும் ஊர் மக்களும் மேற்படி பாதையை பயன்படுத்தி பிரதான சாலையை சென்றடைந்தோம் என்றால் சரியல்ல, சி எஸ் ஐ சர்ச் சாலையை தான் நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். இரயில் நிலையத்திலிருந்து இறங்கி வரும் மக்கள் நான் குறிப்பிடும் இணைப்பு பாதை வழியாக பிரதான சாலையை சென்றடைவார்கள் என்றால் சரியல்ல, அந்த பாதையை பயன்படுத்த மாட்டார்கள், அவர்கள் வேறு பாதையை பயன்படுத்துவார்கள். நான் குறிப்பிடும் வேற்று பாதையானது பிரதான சாலையில் சென்று அடையும் இணைப்பு சாலையில் சென்று அடைகிறது என்றால் சரியல்ல.

10. வழக்குB பட்டிகை சொத்தின் அகலம் எவ்வளவு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 10 அடியாக குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் என்னுடைய வீட்டிலிந்து மேற்கு பக்கம் வந்து வடக்கு திசையில் சென்று கிழக்கு பக்கம் செல்ல கூடிய ஒரு கான்கிரீட் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழக்கு பக்கம் செல்லக்கூடிய சிமெண்ட் ரோடை தான் நான் இரயில் நிலையத்தின் இணைப்பு சாலையாக பயன்படுத்தும் பாதையாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிழக்கு நோக்கி செல்லும் சிமெண்ட் சாலை எதன் வழியாக செல்கிறது என்றால் இரயில்வே சொத்தின் வழியாக செல்கிறது.

11. இரயில் ஊழியர்கள் குடியிருப்பில் உள்ள மக்கள் மேற்படி சிமெண்ட் சாலையை பயன்படுத்தி இரயில் நிலையத்திற்கு சென்றடைவார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் வழீபாதையாக குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் 3 அடி வீதியில் கான்கிரீட் தளமும் இருபுறமும் மேற்படி சாலை விரிவு செய்யப்பட்டு மண் தளமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், இருபுறமும் உள்ள சொத்தின் உரிமையாளர்களில் சிலர் இடம் விட்டுள்ளார்கள். மேற்படி நான்

குறிப்பிடும் உரிமையாளர்கள் எப்போது இடம் விட்டு காம்பவுண்ட் சுவர் கட்டினார்கள் என்றால் சுமார் 2 முதல் 3 வருடங்களுக்கு முன்னர் கட்டினார்கள்.

12. மேற்படி கான்கிரீட் ரோட்டின் ஒரு பகுதியில் மின் கம்பம் நடப்பட்டுள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மின்கம்பத்திற்கும் காம்பவுண்ட் சுவருக்குமிடையே 3 அடி வீதியில் மண் தளம் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், இருபுறமும் 0.75 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளார். அதே போல் சுமார் 100 அடி துாரத்திற்கு கான்கிரீட் சாலைக்கு இருபுறமும் விரிவாக்கப்பட்ட இடமான மண் சாலை உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, 100 அடி குறைவாக தான் இருக்கும்.

13. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் B பட்டிகை சொத்தை பச்சை வண்ண நிறத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி B பட்டிகை சொத்தை பச்சை வண்ண நிறத்தில் காட்டப்பட்டுள்ள இடத்தில் பொது பாதையாக 2.50 மீட்டர் துாரம் தான் வீதி உள்ளது என்றால் சரிதான், பச்சை நிறம் பொது பாதையாகும், மஞ்சள் நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது பிரதிவாதியின் சொத்தாகும். மேற்படி 2.50 மீட்டர் என்பது 8 அடி என்றால் 8 அடிக்கு கூடுதலாக இருக்கலாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 20.11.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்